அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு, வகை ஏதும் இல்லாமல் இருப்பவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி யென்றால் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் பணம் கொடுக்க முடியும். அவர்கள் ஒரு இலட்சத்து சொச்சம் பேர் கள்தான் இருப்பார்கள். ஆகவே இப்படிப் பார்த்தால் சொன்னது ஒன்று, செய்தது ஒன்று, கொண்டு வந்து நிறுத்தி இருப்பது ஒன்று. ஆகவே இந்தத் திட்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஒரு பொய்யான தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே நாட்டு மக்களை ஏமாற்றுகிற நிலையிலே ஒரு நிதிநிலை அறிக்கை வைத்திருப்பதை என்னாலே பாராட்ட முடியவில்லை. நீங்கள் மக்களை ஏமாற்றி மன்றத்திற்கு வந்திருக்கிறீர்கள். ஆகவே இந்த மன்றம் உங்களைச் சும்மா விடாது என்பதை மட்டும் கூறி நான் விடை பெறுகிறேன்.

8. அறிக்கை அளித்தல்.

(அ) மின்வெட்டினைத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இவ்வாண்டு, பருவமழை ஓரளவு, நல்ல நிலையில் உள்ளதால் ஏற்பட்டுள்ள நீர்த்தேக்கங் களின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு ஏற்கனவே அமுலில் இருந்து வந்த மின்வெட்டு 30—6—1980 அன்று சில பயனீட்டாளர்களுக்கு தளர்த்தப் பட்டது. அப்பொழுது மீண்டும் 10—7—1980 அன்று ஆய்வு செய்வதாக திட்டமிடப்பட்டது. எனினும், இப்பொழுது நிலைமை மேலும் சீரடைந்து வருவதால் 7—7—1980 லிருந்து மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் கீழ்க்கண்டவாறு தளர்த்தப்படுகின்றன.

1. இப்போது கிராமப்புற இணைப்புகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் பகலில் 6 மணி நேரம் அல்லது இரவில் 8 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. இனி கிராமப்புறங்களில் பகலில் ஆறு மணி நேரமும், இரவில் எட்டு மணி நேரமும் மின்சக்தி கிடைக்கும் வகையில் இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் பகல் நேர மின்சாரம் மாதத்தில் 15 நாட்கள் காலையிலும், 15 நாட்கள் மாலையிலும் வழங்கப்படும்.

2. உயர் அழுத்தத் தொழில்களில் தொடர்ந்து இயங்கும் தொழில்களுக்கு முப்பது சதவீதம் மின்வெட்டும், இதரத் தொழில்களுக்கு அறுபது சதவீத மின்வெட்டும் ஏற்கனவே இருந்து வந்தன. இனி அனைத்து உயர் அழுத்தத் தொழில்களுக்கும், மின் தேவையில் இருபது சதவீத வெட்டு என்றும், மின் சக்தியில் பதினைந்து சதவீத வெட்டு என்றும் குறைக்கப்படுகிறது. உயர்

1980 ஜூலை 4] [திரு. ச. இராமச்சந்திரன்]

அழுத்த மின்சாரம் பெற்று வரும் மத்திய, மாநில அரசு அலுவலகங்களுக்கு மின்வெட்டு அறவே நீக்கப்படுகிறது. ஏற்கெனவே விலக்கு அளிக்கப்பட்ட இணைப்புகள் தொடர்ந்து இச்சலுகையைப் பெறும்.

3. புதிய மின் இணைப்பு கேட்டு கிடைக்கப்பெறாமல் உள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் விரைவில் மின்சக்தி கிடைக்கும் வகையில், புதிய மின் இணைப்புகளுக்கான தடை அறவே நீக்கப்படுகிறது.

4. நியான் விளக்குகள், விளம்பர, அலங்கார விளக்குகளுக்கு இருந்து வந்த தடையும், தெரு விளக்குகளுக்கு இருந்து வந்த தடையும் அறவே நீக்கப்படுகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் மின்சாரம் பயனீட்டாளர்கள் மகிழ்வுறுவர் என நம்புகிறேன்.

7. 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பொது விவாதம்—தொடர்ச்சி.

(முற்பகல் 10-20)

* **திரு. வி. வி. சுவாமிநாதன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் நாவலர் அவர்கள் கொண்டு வந்த இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனதாரப் பாராட்டுகிறேன். நான் மாத்திரம் அல்ல. தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான எல்லாப் பத்திரிகைகளும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கின்றன. எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் நாங்கள் எதிரிக் கட்சியாக இருக்க மாட்டோம். எதிர்க்கட்சியாக இருப்போம் என்று சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியதிலிருந்து அவர்கள் எதிர்க்கட்சியல்ல எதிரிக்கட்சியாகத்தான் இந்த பட்ஜெட்டை விமர்சித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பத்திரிகையான சுதேசமித்திரன் கூட இந்த பட்ஜெட்டை 'சபாஷ்' என்று சொல்லியிருக்கிறது. ஆனால் நமது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் அது 'தமாஷ்' என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பொதுச் செயலாளர் 'மிக அருமையான பட்ஜெட்' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்துஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் திரு. டி. எஸ். எஸ். மணி அவர்கள் மிக துணிச்சலான பட்ஜெட் என்று சொல்லியிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் மட்டுமல்ல, ஆந்திர மாநில வர்த்தக சங்கத் தலைவர் கூட இது மிக அழகான பட்ஜெட் என்று பாராட்டியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு